# THANIKACHALAM NAGAR (EAST) AND SRINIVASA NAGAR
## RESIDENTS WELFARE ASSOCIATION (Regd. No.299/91)

President: D. KASITHANGAM
Vice-Presidents: G. SUNDAR, Dr.VELMURUGAN, SYED SHAWNAWS
Secretary: M.SIVAJI GANESAN
Asst. Secretaries: S. MURALI, T.M.KUMARASAMY
Treasurer: E.GAJENDIRAN
Joint Treasurer: P.LAKSHMIDARAN
Legal Advisor: T S RAJAMOHAN BABL MBA
Auditor: A SAMPATH

பெறுநர்
பொது தகவல் அதிகாரி,
சென்னை மாநகராட்சி,
மாதவரம், மண்டலம் -3,
சென்னை 600 060.

தேதி: 18-08-2017.

ஐயா,

பொருள்: எங்கள் நகரில் அமைந்துள்ள பொது இடம் - மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுத்தது – தகவல் அறியும் உரிமை சட்டப்படி கோருதல் – சம்பந்தமாக.

---

விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகரில் மண்டலம்-3, 33-வது வார்டு மாதவரத்தில் தணிகாசலம் நகர் கிழக்கு மற்றும் சீனிவாசா நகர் அமைந்துள்ளது.

எங்கள் நகரில் 20/69 லே-அவுட்டில் உள்ள சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி சார்பில் தற்போது மேம்பாட்டு பணிகள் நடந்து வருவதை அறிந்தோம். அந்த மேம்பாட்டு பணிகள் சம்பந்தமாக சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் கீழ்கண்ட விவரங்களை எங்கள் சங்கத்திற்கு தகவல் அறியும் உரிமை சட்டபடி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. மேற்படி மேம்பாட்டு பணிகள் மனைபிரிவு லே-அவுட்டில் உள்ளதுபடி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கப்படுகிறதா? இல்லை வேறு ஏதேனும் நோக்கத்திற்காக மாற்றங்கள் செய்யப்படுகிறதா?
2. 20/69 லே-அவுட்டில் அப்புருவலின் படி மேற்படி இடத்தில் சென்னை மாநகராட்சி பொதுமக்கள் பயன்பாட்டிற்கான மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ளதா.
3. மேற்படி மேம்பாட்டு பணிகளை தொடங்க மாமன்ற மாநகர சபையில் எந்த தேதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
4. DTP அப்புருவலின் படி மேற்படி ஒதுக்கிய இடத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பணியை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா.
5. சென்னை மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருந்தால் தீர்மானத்தின் நகலை எங்களுக்கு அளிக்க வேண்டுகிறோம்.

Contd..2..

Plot No.1, Sri Raman Salai, Thanikachalam Nagar East, Ponniamman Medu post, Chennai 600110. Cell No.9840100420, 9940436582, 9444821931

| | | |
|---|---|---|
| | நகலை எங்களுக்கு அளிக்க வேண்டுகிறோம். | தீர்மான குறிப்புகளை பார்வையிடலாம் என தெரிவிக்கப்படுகிறது. |

Scanned by CamScanner

# THANIKACHALAM NAGAR (EAST) AND SRINIVASA NAGAR RESIDENTS WELFARE ASSOCIATION (Regd. No.299/91)

**Contd...**



6. மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கான எந்த எந்த பணிகள் செய்ய சென்னை மாநகராட்சி முன்வந்துள்ளது.

7. மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள வேலை விவரங்கள் (Work Order) நகலை கோருகிறோம்.

8. மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிகளின் ஒப்பந்த பணிக்காலம் எத்தனை மாதத்திற்குள் முடிக்கவேண்டும்.

9. மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிகள் எந்த ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த்தாரரின் முழுவிவரங்களையும் அளிக்குமாறு கோருகிறோம்.

10. மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிக்கு சென்னை மாநகராட்சி நிர்வாகம் ஒதுக்கிய மொத்த தொகை எவ்வளவு. தற்போது எவ்வளவு தொகை செலவு செய்ய நிர்வாகம் முன்வந்துள்ளது.

11. மேற்படி மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி எப்பொழுது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மேற்படி கோரியுள்ள அனைத்து விவரங்களையும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி அளிக்குமாறு கோருகிறோம். மேலும் தகவல் அறியும் உரிமை சட்டப்படி கோரிக்கைக்கு உரிய Court Fee Stamp இந்த மனுவில் இணைக்கப்பட்டுள்ளது.

நன்றி,

இப்படிக்கு,

செயலாளர்.

Plot No.1, Sri Raman Salai, Thanikachalam Nagar East, Ponniamman Medu post, Chennai 600110. Cell No.9840100420, 9940436582, 9444821931

| | |
|---|---|
| நகலை எங்களுக்கு அளிக்க வேண்டுகிறோம். | தீர்மான குறிப்புகளை பார்வையிடலாம என தெரிவிக்கப்படுகிறது. |

Scanned by CamScanner

R.P.D.POST

பெருநகர சென்னை மாநகராட்சி

அனுப்புநர்:

பொது தகவல் அலுவலர் மற்றும்
கண்காணிப்பாளர்
பூங்கா துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

பெறுநர்:

திரு.சிவாஜி கணேசன்,
பிளாட் எண்.1, பூரியான் சாலை,
தணிகாசலம் நகர் (கிழக்கு),
பொன்னியம்மன் மேடு போஸ்ட்,
சென்னை – 600 011.

ப.து.ந.க.எண். து1/1205/2017

நாள். 28.09.2017

ஐயா,

பொருள்: பெருநகர சென்னை மாநகராட்சி – பூங்காதுறை – தகவல் அறியும் உரிமைசட்டம் – 2005ன் கீழ் பதில் அளிப்பது – சம்பந்தமாக.

பார்வை: தங்களின் கடிதம் நாள் 18.08.2017 (பூங்காதுறையில் பெறப்பட்ட நாள் 15.09.2017)

******

பார்வையில் கண்டுள்ள மனுவில் தாங்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரியுள்ள தகவல்களில் வரிசை எண் 1 முதல் 11 வரை உள்ள இனங்களுக்கு கீழ்க்கண்டவாறு தகவல் அளிக்கப்படுகிறது.

| வ.எண் | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | மேற்படி மேம்பாட்டு பணிகள் மனைப்பிரிவு லே–அவுட்டில் உள்ளபடி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கப்படுகிறதா ? இல்லை வேறு ஏதேனும் நோக்கத்திற்காக மாற்றங்கள் செய்யப்படுகிறதா ? | தணிகாசலம் நகர் பொன்னியம்மன் மேடு 80 அடி சாலையில் உள்ள திறந்தவெளி நிலத்தில், பூங்கா, சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் நடைபாதை அமைக்கப்படுகிறது. |
| 2. | 20/69 லே– அவுட்டில் அப்ரூவலின்படி மேற்படி இடத்தில் சென்னை மாநகராட்சி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டுள்ளதா | மேற்குறிப்பிட்ட இடத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கான பூங்கா மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 3. | மேற்படி மேம்பாட்டு பணிகளை தொடங்க மாமன்ற மாநகர சபையில் எந்த தேதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. | சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் அனுமதி மன்ற தீர்மான எண் 340, நாள்.06.06.2017. |
| 4. | DTP அப்ரூவலின் படி மேற்படி ஒதுக்கிய இடத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பணியை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா | மேற்குறிப்பிட்ட இடத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்கான பூங்கா பணிக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 5. | சென்னை மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருந்தால் தீர்மானத்தின் நகலை எங்களுக்கு அளிக்க வேண்டுகிறோம். | தாங்கள் அலுவலக வேலை நாட்களில் நேரடியாக மேற்குறிப்பிட்ட பணிக்கான மன்ற தீர்மான குறிப்புகளை பார்வையிடலாம் என தெரிவிக்கப்படுகிறது. |

Scanned by CamScanner

| | | |
|---|---|---|
| 6. | மேலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கான எந்த எந்த பணிகள் செய்ய சென்னை மாநகராட்சி முன்வந்துள்ளது. | மேற்குறிப்பிட்ட திறந்தவெளி நிலத்தில் பூங்கா, சிறுவர் விளையாட்டு திடல் நடைபாதை மற்றும் காப்பாளர் அறை அமைக்கப்படுகிறது. |
| 7. | மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள வேலை விவரங்கள் நகலை கோருகிறோம். | அலுவலக வேலை நாட்களில் நேரடியாக பார்வையிடலாம் என தெரிவிக்கப்படுகிறது. |
| 8. | மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிகளின் ஒப்பந்த பணிக்காலம் எத்தனை மாதத்திற்குள் முடிக்க வேண்டும். | ஒப்ப பணிக்காலம் பணி ஆணை வழங்கிய நாள் முதல் 5 மாதங்கள் |
| 9. | மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிகள் எந்த ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரரின் முழுவிவரங்களையும் அளிக்குமாறு கோருகிறோம். | பூங்கா பணிகளை ஒப்படைக்கப்பட்டுள்ள ஒப்பந்த முகவரி<br>திருமதி.மேனகா,<br>எண்.02, திரு.வி.க. முதல் தெரு,<br>வில்லிவாக்கம்,<br>சென்னை– 600 049. |
| 10. | மேற்படி சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ள மேம்பாட்டு பணிக்கு சென்னை மாநகராட்சி நிர்வாகம் ஒதுக்கிய மொத்த தொகை எவ்வளவு தற்போது எவ்வளவு தொகை செலவு செய்ய நிர்வாகம் முன்வந்துள்ளது. | மேற்குறிப்பிட்டுள்ள திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்க ஒதுக்கிய தொகை ரூ.33.40 இலட்சங்கள் இப்பணிக்கு இதுவரை பட்டிதொகை வழங்கப்படவில்லை. |
| 11. | மேற்படி மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி எப்பொழுது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். | மேற்குறிப்பிடப்பட்டுள்ள திறந்தவெளி நிலத்தில் பூங்கா அமைக்கும் பணி ஒப்ப பணிக்காலத்திற்குள் பணி முடிக்கப்படும் பணி முடிந்தவுடன் மக்கள் பயன்பாட்டிற்கு வரும். |

28/9/2017

பொது தகவல் அலுவலர் மற்றும்
கண்காணிப்பாளர்(பூங்கா)

Scanned by CamScanner